**OS No 118 / 2018**

**DW1** - நல்லதம்பி

**நாள் 04 -07-2025**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள பட்டா எண்.29, பட்டா எண்.174 மற்றும் பட்டா எண்.552 ஆகிய பட்டாக்களை தாவா வழக்கில் என் தரப்பு ஆவணங்களாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியும். நான் தாக்கல் செய்துள்ள ..."பி.வா.சா.ஆ.4 ஆவணம் என் தகப்பனார் உள்ளிட்ட நபர்கள் வாதிகளாக இருந்து பிரதிவாதிகளாக லெட்சுமிஅம்மாள் உள்ளிட்ட இரண்டு நபர்கள் உள்ள OS.No.138/1996 வழக்கின் தீர்ப்புரை ஆகும். அந்த தீர்ப்புரையின் 15 வது பத்தியில் 1 ம் பிரதிவாதி (லெட்சுமி அம்மாள்) தனது எதிர்வழக்குரையில் தனக்கு தாவா சொத்துக்கள் பூர்வீக பாத்தியம் எனவும் பட்டா ஏற்பட்டுள்ளது என்றும், கிஸ்து செலுத்துவதாகவும், தனக்கு தீர்ப்பு ஏற்பட்டதாகவும், தாவா சொத்துக்களையும் கிரையம் கொடுத்துவிட்டதாகவும், கிரையம் பெற்றவர்களை கட்சிக்காரர்களாக சேர்க்கவில்லை எனவும் கூறி அவர் தரப்பில் பி.சா.ஆ. 1 முதல் 6 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாய்மொழி சாட்சியம் இல்லை"... என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

இந்த OS.No.138/1996 வழக்கில் என் தகப்பனார் லெட்சுமி அம்மாள் என்பவரை அவராகவே போலியாகவே சேர்த்துக்கொண்டு அவருக்கு எதிர்வாதம் செய்வதுபோல் தயார் செய்து பெறப்பட்ட தீர்ப்பு என்றால் சரியல்ல. லெட்சுமிஅம்மாள் என்பவர் அதனால் தான் வாய்மொழி சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. அந்த காலகட்டத்தில் லெட்சுமிஅம்மாள் என்பவர் உயிருடன் இல்லை என்றாலும் சரியல்ல. அந்த லெட்சுமிஅம்மாள் 1948 ம் ஆண்டிலேலே இறந்துவிட்டார் என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.5 என்பது இந்த வாதி சமூகம் நீதிமன்றத்தில் என்மீதும், ஆறுமுகம், அழகர்சாமி ஆகியோர்கள் மீதும் தாக்கல் செய்த OS.No.117/2018 வழக்கின் தீர்ப்பாணை ஆகும். இந்த வழக்கில் கண்ட சொத்தான புலஎண்.110/9 என்பது தாவா வழக்கில் கண்ட சொத்துக்களுக்கு அருகாமையில் உள்ள சொத்துக்கள் ஆகும். அந்த வழக்கில் கண்ட சொத்தை அந்த வழக்கில் கண்ட பிரதிவாதியான அழகர்சாமி என்பவர் ஆவண எண்.1290/2023 மூலம் இந்த வாதியிடம் பட்டா பாத்திய விடுதலை பத்திரம் பெற்றுக்கொண்டார் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் அந்த பட்டா பாத்திய விடுதலை பத்திரம் ஆகும். அது என் தரப்பு சான்றாவணம் **வா.சா.ஆ.5 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

அந்த வழக்கில் கண்ட 3ம் பிரதிவாதியான அழகர்சாமி என்பவரே அந்த வழக்கில் கண்ட சொத்தை வா.சா.ஆ.5 பட்டா பாத்திய விடுதலை பத்திரம் மூலம் வாங்கிவிட்டதால் அந்த வழக்கை வாதி மேல்நடத்தவில்லை என்றால் சரியல்ல.

இந்த வழக்கு சொத்துக்களில் இருந்த நெல்கதிர்களை நான் அறுத்துக்கொண்டு சென்றுவிட்டேன் என்பதற்காக வாதியின் புகாரின் பேரில் என்மீதும், இதர 3 நபர்கள் மீதும் மானாமதுரை காவல் நிலையத்தில் கு.எண்.262/24 வழக்கு போடப்பட்டுள்ளது. ஆனால் அது பொய்யான வழக்கு ஆகும். சொத்தை நாங்கள் தான் அனுபவம் செய்து வருகிறோம். என்னிடம் காட்டப்படும் குற்ற நகல் தான் அந்த முதல் தகவல் அறிக்கை ஆகும். அந்த முதல் தகவல் அறிக்கை **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதுபோல் வாதியின் பவர் ஏஜெண்டான கண்ணன் என்பவர் ரியல் எஸ்டேட் தொழில் செய்து தாவா சொத்துக்களை அபகரிக்க நினைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் ஆதியில் லெட்சுமிஅம்மாள் என்பவருக்கு பாத்தியம் என்றும், அவருக்கு பிறகு அவருடைய மகன் சோமநாதனுக்கு

பாத்தியம் என்றும், அவருக்கு பிறகு இந்த வாதி சிவராமனுக்கு தாவா சொத்து பாத்தியம் என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கும், என் முன்னோர்களுக்கும் எந்தகாலத்திலும் தாவா சொத்துக்கள் பாத்தியம் இல்லை என்று சொன்னாலும், தாவா சொத்துக்களை நானோ, எனது முன்னோர்களோ அனுபவம் செய்யவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. அதனால் தான் என்மீது தாவா சொத்துக்களிலிருந்து நெல்மணிகளை நான் அறுத்துக்கொண்டபோது குற்ற வழக்கு பதியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**-Sd-**

**Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.**

**-Sd-**

**District Munsif,**
**Manamadurai.**